# கிரீன்வுட் தொடக்கப்பள்ளியின் திரைக்குப் பின்னால் உழைக்கும் நாயகர்கள்!



கிரீன்வுட் தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் கற்பதற்கு ஏதுவான சூழலையும் அவர்கள் பாதுகாப்பாகப் பள்ளியைச் சுற்றி வலம் வருவதற்கும் முக்கிய காரணமாக இருப்பவர்கள், இதோ நம் பள்ளிப் பணியாளர்களே!



திரு டான் பள்ளித் தேர்வு காலங்களில், வகுப்பறையிலுள்ள மேசை நாற்காலிகள் சுத்தமாக இருப்பதையும் பழுதின்றி இருப்பதையும் உறுதிச் செய்வார். பள்ளி குளத்திலும், பள்ளி உணவகத்திலும் உள்ள மீன்களுக்கு வேளை தவறாமல் அவர் உணவளிப்பார்.

திருவாட்டி பாக்கியம் பள்ளித் தேர்வுக்காலங்களில் மிகவும் மும்முரமாக காணப்படுவார். அதற்குக் காரணம், பள்ளித் தேர்வுத்தாள்களை அச்சிட்டுத் தருவது அவரது முக்கிய பொறுப்புகளில் ஒன்று. அதோடு, மாணவர்கள் வகுப்பில் செய்யும் பயிற்சித்தாள்களையும் அவர்தான் நமக்காக அச்சிட்டுக் கொடுப்பார். அவர் பள்ளியில் உடல் நலமில்லாத மாணவர்களையும் அன்போடு பார்த்துக்கொள்வார்.





திருவாட்டி ஃபரிடா அறிவியல் கூடத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் தங்களின் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தேவையானவற்றைத் தயார் செய்து தருவார். அதோடு, அறிவியல் கூடம் தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதையும் உறுதிச் செய்வார். அவர் பள்ளி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்குத் தேவையான மேசை நாற்காலிகளை ஒழுங்காக அடுக்கி வைக்கவும் உதவுவார்.

திரு இஸ்மாயில் காலையில் பள்ளியிலுள்ள எல்லா வகுப்பறைகளையும் நேரத்தோடு திறந்து வைப்பார். மாலையில் பள்ளியிலுள்ள எல்லா அறைகளையும் பொறுப்பாக பூட்டி வைப்பார். அதோடு, பள்ளி முடிந்ததும் மாணவர்கள் பாதுகாப்பாக வீடு திரும்ப, அவர்கள் கவனமாகச் சாலையைக் கடக்க உதவுவார்.





தொகுத்தவர்:
ஹரிராம்
4 Responsibility

இந்த நால்வரும் கிரீன்வுட் தொடக்கப்பள்ளி சிறப்பாகச் செயல்பட தங்களின் பணியைச் செவ்வனே ஆற்றி வருகிறார்கள். இவர்கள் இல்லாத பள்ளியை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

## நம் பள்ளிப் பணியாளர்களின் சேவை நம் பள்ளிக்கு மிகவும் தேவை

நம் பள்ளிப் பணியாளர்கள் அவர்களின் பொறுப்புகளைக் கடமை தவறாது செய்கிறார்கள். அவர்களுடைய கடின உழைப்பின்றி, நம் பள்ளி சிறப்பாக இயங்க முடியாது. அதோடு, பள்ளி சீருடன் செயல்படவும் அனைவரும் பாதுகாப்பாக இருக்கவும் அவர்கள் தங்களின் பங்கினை ஆற்றி வருகிறார்கள். நம் பள்ளிப் பணியாளர்களின் உதவியோடு நம் பள்ளி தூய்மையாகவும் திகழ்கிறது.



அதர்வா
4 Integrity

## நாம் இவர்களுக்கு எவ்வாறு உதவியாக இருக்கலாம்?

இவர்களின் பணியை எளிதாக்க மாணவர்களாகிய நாம் நம்மால் முடிந்த எளிய உதவிகளைச் செய்யலாம். வகுப்பறையை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதோடு பாட வேளை முடிந்த பின், மேசை நாற்காலிகளை ஒழுங்காக அடுக்கி வைக்கலாம். அதோடு, வகுப்பைவிட்டு வெளியேறும் முன், சன்னல்களை அடைத்துவிட்டு, விளக்குகளையும் மின்விசிறிகளையும் அணைத்துவிடலாம். இது அவர்களது பணிச் சுமையைச் சற்றுக் குறைக்கும்.



டெக்ஷீனா
4 Care

## நமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்போம்!

நம் பள்ளிப் பணியாளர்கள் கிரீன்வுட் தொடக்கப்பள்ளிக்கு ஆற்றும் அரிய சேவையை மாணவர்களாகிய நாம் நிச்சயமாக மதித்துப் பாராட்ட வேண்டும். நமது நன்றியை அவர்களுக்குத் தெரிவிக்க நாம் அவர்களுக்கு வாழ்த்து அட்டைகளைத் தயாரித்துக் கொடுக்கலாம். அவர்களை நாம் பள்ளியில் காணும்போது, புன்னகை மலர்ந்த முகத்தோடு அவர்களுக்கு வணக்கம் கூறலாம். மாணவர்களாகிய நாம் பொறுப்புடன் நடந்துகொண்டு, நம் பள்ளிப் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைக்கலாம்.



தருண்
4 Resilience

**உங்களின் கடின உழைப்பிற்கும் நீங்கள் கிரீன்வுட் பள்ளிக்கு ஆற்றும் சேவைக்கும் மிக்க நன்றி!**